Registered No. M. 2830

"SIDDHANTHAM"

Vol 43 — No. 8

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 43	சாதாரண ஆவணி 1970 ஆகஸ்டு	இதழ் 8

உள்ளுறை	பக்கம்

இதழாசிரியர் : மூ. அருணாசலம், எம். ஏ.,
துணையிதழாசிரியர் : வித்துவான் அம்பை. இரா. சங்கரன்,
சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

சமாஜச் செயற்குழுக் கூட்ட அறிவிப்பு

இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்த ஜன சபையில் 30—8—70 ஞாயிறு காலை 9-30 மணிக்கு சமாஜச் செயற்குழுக் கூட்டம் நிகழும். அவ்வமயம் வரவு செலவுக் கணக்கு, ஆண்டு விழா, ஆங்கில சித்தாந்தா, சமாஜத் தேர்வுகள் முதலியன பற்றி ஆலோசிக்கப்பெறும். செயற் குழு உறுப்பினர்கள் எல்லாரும் அவசியம் வருமாறு கேட்டுககொள்ளப் பெறுகின்றனர். (செயலாளர்)

திரு. R. M. துரைசாமி முதலியார் அவர்கள் (82, பசார் ரோடு, இராயப்பேட்டை, சென்னை 14) நம் சமாஜ ஆயுள் உறுப்பினராகச் சேர்ந்துள்ளார்கள என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

புதுவை ஸ்ரீ வேதபுரீசுவரர் வரதராஜப் பெருமாள் நூல் நிலயத்தில் கயப்பாக்கம் திரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் 19—6—70 முதல் 5—7—70 முடிய பெரிய புராண விரிவுரையாற்றினார்கள்.

திரிசிரபுரச் சைவ சித்தாந்த சபையில் 7—7—1970 ல் "மாணிக்க வாசக" சுவாமிகள் திருநாள் விமரிசையாகக் கொண்டாடப் பெற்றது. சிவத்திரு. பாலகவி, வே. இராம நாதன் செட்டியாா (தத்புருஷ தேசிகர்) அவர்கள் "திருக் கோவையார்" என்ற தலைப்பில் விரிவுரையாற்றினார்கள.

காவேரிப்பாக்கத்தை யடுத்த இராமாபுரம் மணிவா சகர் மன்றத்தில் மூன்றாம் ஆண்டு மணிவாசகர் விழா திரு வாலங்காடு திரு. இரத்தினசபாபதி தேசிகர் அவர்கள் தலைமையில் 12—7—70 ல் மிகச்சிறப்புற நிகழ்ந்தது. புலவர் பெருமக்கள் பலர் பங்கேற்றுச் சமய விரிவுரைக ளாற்றினர்.

காஞ்சிபுரம் மெய்கண்டார் கழகச் சார்பில் காஞ்சிச் சிவத்தல வாரவழிபாடு 12—7—70, 19—7—70 26-7-70 ஆம் நாள்களிலும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் விழாவும் மெய்கண்டதேவ நாயனா ஆடிச்சுவாதி விழாவும் 9—8—70 லும் சிறப்பாக திருவேகம்பம் முதலிய திருக கோயில்களில் நிகழ்ந்தன. பலர் சமயவிரிவுரைகளாற்றிச் சிறப்பித்தனர்.

சேலம் செவ்வாய்ப்பேட்டை அருட்ஜோதி மன்றத்தின் 15-ஆவது ஆண்டு விழா 9—8—70 ஞாயிறன்று சிறப்புற நிகழ்ந்தது. பெருமக்கள் பலர் சமய வாழ்க்கையின் அவசியம் பற்றிப்பேசினர்.

Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் ளாடு.

மலர் 43	சாதாரண ஹூ ஆவணி ஆகஸ்டு 1970	இதழ் 8

வெள்ளிக் கவசமும் தங்கக் கவசமும்

(ஆசிரியர்)

இந்த நூற்றுண்டின் வாழ்க்கை ஒரே ஆடம்பர மோகத்தில் நடைபெறுகிறது. பெரும்பான்மையான மக்கள் கோயில் வழிபாட்டிலும் இந்த ஆடம்பரத்தைப் பெருக்குவதில் மிக்க மகிழ்ச்சி கொள்கிருர்கள். கோயில் நிர்வாகத்தாரும், மக்கள் விரும்புவதே சரி என்று எண்ணி, இடம் கொடுக்கிருர்கள். சிலர் ஆடம்பரத்தில் ஆசைப் பட்டுச் செய்கிருர்கள். சில நிர்வாகத்தார் உண்மையா கவே தெய்வபக்தி உடையவர்கள்; அவர்களும் காலத்தின் போக்கிற்கேற்ப ஆடம்பரம் செய்வதே சிறந்த தெய்வப் பணி என்று உண்மையாகவே நம்புகிருர்கள். இது பெரிதும் இரங்கத் தக்க நிலை.

உதாரணமாக ஒன்று சொல்வோம் பலருக்கு சுவாமி தரிசனம் செய்வதிலும் தேவாரம் பாடுவதிலும் காணும் இன்பத்தை விட, சுவாமிக்கு வெள்ளிக் கவசமும், தங்கக் கவசமும் நாகாபரணம் முதலிய பிற அணிகலன்களும் கிடைத்தவரையில் பூட்டிப் பார்ப்பதில் மகிழ்ச்சி அதிகம். சுவாமிக்கு நவரத்ன அங்கி வைரமுடி, வைரவேல் என்றெல் லாம் இது வளர்ந்துகொண்டே போகிறது. இதனோடு நிற்பதில்லை. வெள்ளி ரிஷபம், வெள்ளி மயில், வெள்ளி

விமானம், வெள்ளி ரதம், கொடிமரத்துக்குத் தங்கமூலாம், என்றெல்லாம் இது விரிந்துகொண்டே போகிறது. ஒரு சுவாமியார் வெள்ளி ரதம் செய்வதற்குப் பணம் திரட்டு கிருர் என்று பத்திரிகையில் பார்க்கிரும். சாமியார் துறவியாயிற்றே, இவருக்கு வெள்ளியில் ஏன் மோகம் என்று எண்ணுமல் இருக்க முடியவில்லை. இன்னும் செல்வம் அதிகம் திரட்டக்கூடிய இடங்களில் வாயில்படிக் கும் கதவுகளுக்கும் வெள்ளிக்கவசம் (தர்மகர்த்தாக் களுக்கு வெள்ளிக்கவசம் போடாதது தான் பாக்கி! அதற் குப் பதிலாக பொன்னுடை இருக்கவே இருக்கிறது.) என் றெல்லாம் இது பெருகிக் கொண்டே போகிறது.

இவற்றை எண்ணி நாம் சிறிது திகைக்காமல் இருக்க முடியவில்லை. 'கல்லிலும் செம்பிலுமோ இருப்பான் எங்கள் கண்ணுதலே' என்று பெரியவர் பாடினர். பரம்பொருள் பேரும் வடிவும் இல்லாதது. பார்க்கின்ற கல்லையும் செம்பையும் கடந்து அப்பால் உள்ளது. இப்படி அப்பாற்பட்டதை மனம் சென்று பற்ற வேண்டும் என்பது சமயக் கருத்து. நம் கோயில்களில் கல்லினலும் செம்பிலுைம்தான் சிலைகள் செய்யப்பட்டுள்ளன. மக்கள் இவற்றைக் கண்டபோது கல்லைப் பார்க்கவில்லை, செம் பைப் பார்க்கவில்லை; இவற்றினுள்ளே நாமருபம் கடந்த பரம்பொருளைக் காணும் பக்குவம் பெற்றிருந்தார்கள். நம் முன்னேர்க்கு வெள்ளியும் பொன்னும் கிடைக்காமல் இல்லை. தமிழ் நாட்டின் பொற்காலம் என்று சொல்லத் தக்க சோழர் ஆட்சியில், நாட்டில் வெள்ளியும் பொன்னும் ஏராளமாய்க் குவிந்திருந்தன. சோழர்கள் கோயிலுக்குக் கணக்கில்லாமல் பொன்னும் வெள்ளியும் வாரி வழங்கினர் கள். ஆனல் ஓரிடத்திலனும் பொன்னலும் வெள்ளியி னலும் சிலைகள செய்யவில்லை. கல்லுக்கும் செம்புக்கும் விலை மதிப்புச் சிறிதும் இல்லை; ஆகையால் இவற்ருல் செய்யபபட்ட தெய்வ வழிபாட்டைக் கண்டபோது மக்கள் இவற்றை மறந்து, இங்குத் தெய்வத்தைக் கண்டார்கள்.

மேலும் சிற்பக் கலைஞன் கல்லில் தன் கைத்திறமை யைக் காட்டி, தெய்வ வடிவம் அமைத்து வைக்கும்போது

அந்த வடிவத்தில் சிற்பக் கலையும், அழகும் சேர்ந்து, மக்களுடைய மன ஈடுபாட்டைப் பல மடங்கு அதிகப்படுத்தி விடுகிறது. கலைஞன் கல்லிலும், மண்ணிலும், செம்பிலும் வெண்கலத்திலுமே தன் கைத் திறமையைக் காட்டினன். ஒரு காலத்திலும் அவன் விலையுயர்ந்த உலோகங்களைத் தன் படைப்புக்கு மூலப்பொருளாக எடுத்துக் கொள்ளவில்லை. வெறும் கல்லையே மக்கள் பரம்பொருளாகக் காணும்போது அக்கல்லில் கலையும் சேர்ந்த பின் மக்கள் மனத்தில் தெய்வ உணர்வு அதிகமாக ஏற்படுகிறது. இக்கலையானது கலையனைத்துக்கும் மூலப்பொருளான பரம்பொருளின் முன் மக்கள் மனத்தை உந்துகிறது.

ஆனால் அந்தோ இப்போது என்ன பார்க்கிறோம்? தெய்வக் கலை அமைந்த சிற்பத்தின் மீது வெள்ளியையும் தங்கத்தையும் போட்டு மூடி வைக்கவே அது குழந்தைகள் வீட்டில் விளையாடும் பொம்மைபோலாகிறது. வெள்ளியையும் நவரத்தினத்தையும் போட்டு மூடிய உடனே, கல்லிலும் செம்பிலும் கண்ட கலையும் அவற்றின் உள்ளீடான தெய்வமும் நம் அகக்கண்ணை விட்டு அகன்று விடுகின்றன. நம் புறக்கண்ணில் வெள்ளியும் நவரத்தினமும் நிற்கின்றன. காண்கின்ற பொருளை மறக்க முடிவதில்லை. காரணம், அது மதிப்புயர்ந்த பொருள் என்பது. போற்றுதலும் வழிபாடும் இவற்றுக்கே சேர்கின்றன! புறவாழ்க்கையில் வெள்ளியையும் பொன்னையும் மணியையும் மதித்துப் பழகிய மக்கள், எதிரில் காண்கின்ற வெள்ளிக்கவசத்தையும் இரத்தின அங்கியையும், வெள்ளிக் கதவையும் கும்பிடுகிறார்கள். இன்றைய உலகம் விலையில் பெரிய இப் பொருளைக் கடந்து அப்பால் செல்வதில்லை; அகக்கண் திறப்பதில்லை, தொழிற்படுவதில்லை.

ஆகவே, நாம் தெய்வத்தைக் காண முடியவில்லை என்னும்போது தெய்வம் பணத்துக்கு இடம் கொடுத்து விட்டு ஓடிவிடுகிறது என்று சொல்லலாமல்லவா? இதற்கு ஆங்கிலத்தில் 'மாம்மன் ஓர்ஷிப்' (Mammon Worship) பணத்தேவதைக்கு வழிபாடு, என்று அழகாகப் பெயர் வைத்திருக்கிறார்கள். இவ்வழிபாடு பெரிய பாவம். இந்தப்

பாவத்திற்கு ஆலய அறங்காவலர்களும் தர்மகர்த்தாவாக இருக்கும் சாமியார்களும் நிர்வாக அதிகாரிகளும் சில சமயம் சிவாசாரியர்களும் கூடப் பொறுப்பாயிருக்கிறார்கள்.

சினிமாவிலே கேலிக்கூத்தையும் போலியையும் ஆடம்பரத்தையும் கண்டு அதில் மோகம் கொண்ட நம்மவாகள் அவற்றைக கோயிலிலும் விரும்பிச் சேர்த்து விட்டார்கள். இது பெரிய பாதகம். பொதுமக்கள் இதை விரும்புகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அறிவுடைய மக்கள் இவற்றைச் சிந்தித்துப் பார்த்து, மக்களுக்கு நல்லறிவை உணர்த்த வேண்டும். வெள்ளியையும் பொன்னையும் அப்பரும் சம்பந்தரும் போன்ற சமயாச்சாரியர் பாடவில்லை. அவர்கள் கண்டு அருள் பெற்ற வடிவத்தை நாமும் கண்டு அருள் பெற முயல வேண்டுமேயொழிய, கல்வடிவத்தை மூடிவைத்து வழிபடக் கூடாது.

வெள்ளிக் கவசங்கள் இன்று பெருகிக்கொண்டு வருகின்ற போக்கைப் பார்க்கும்போது ஆண்டவனே முன்னின்றுதான் சைவத்தைக் காக்க வேண்டும் என்று சொலலத் தோன்றுகிறது.

திருநின்றியூர்

[மு. அ.]

இடம் :- தஞ்சை ஜில்லா மாயூரம் தாலுக்காவில் மாயூரம்—வைத்தீசுவரன் கோயில் பஸ் மார்க்கத்தில் ஐந்தரை மைல் தூரத்தில் உள்ளது. சாலையிலிருந்து ஒருபர்லாங் தெற்கில் கோயில் தனித்து அமைந்துள்ளது. வசதிக் குறைவான மக்கள் வாழும் சிற்றூர். இந்த ஊர் வேறு, தொண்டைநாட்டில் சென்னைக்கு அருகில் பூசலார் நாயனார் தலமாகிய திண்ணனூர் என வழங்கும் திருநின்றவூர் வேறு.

கோயில் :- தருமபுரத்தின் நிர்வாகத்தில் உள்ள சிறு கோயில்; சிறிய கோபுரம், நின்றியூர் நின்றவூர் எனவும்

சொல்வதுண்டு; சுவாமி திருநாமம் லக்ஷ்மி புரேசுவரர், அம்பாள் திருநாமம் உலக நாயகி, இப்பெயரன்றி பரசுராமர் துதித்தமையால் பரசுராமலிங்கம், அவர் தந்தையார் பெயரால் ஜமதக்கினீசுவரர், அகழியால் சூழப்பட்ட கோயிலானமையால் பரிகேசுவரர் (பரிகை=அகழி) என்ற திருநாமங்களும் சுவாமிக்கு உண்டு. லக்ஷ்மி பூசித்த காரணத்தால்தான் இது லக்ஷ்மிபுரம், சுவாமி இதனுல் லக்ஷ்மிபுர நாதர் (தருமபுரம், திருப்பனந்தாள் போன்ற பல பதிப்புக்களில் லக்ஷ்மிநாதர் என்று எழுதியிருப்பது பெரும் பிழை; (லக்ஷ்மி நாதர் மஹா விஷ்ணுவே.) "நண் புடனே, நின்றியூர் வாழ் உலக நாயகி நன் நேசமுறும், இன் துணை மகா லக்மி ஈசனே" என்பது சிவக்ஷேத்திர சிவநாம சத்திநாமக் கலிவெண்பா (20) ஒருவேளை இங்கு பாட்டின் தேவையையொட்டி லக்ஷ்மிபுர ஈசன் என்பதை லக்மி ஈசன் எனச் சுருக்கியிருக்கலாம். ஆலயத்தில் பரசுராமலிங்கம் தனியாக உள்ளது. ஒருகாலத்தில் இங்கு சிறப்பான அகழி யும் மதிலும் இருந்தன. சமீபகாலத்தில் நகரத்தார் திருப் பணி செய்து கோயிலைத் தருமபுரத்திடம் ஒப்புவித்து விட்டார்கள் என்று சொல்வர்.

மூர்த்தி :- மூவர் பாடலும் உடைய சிறப்பமைந்த இந்த க்ஷேத்திரத்தில் இடம் துப்புரவாக இருக்கிறதே யன்றி, மூர்த்திகளின் திருவுருவங்களைக் கொஞ்சமும் கவனித்ததாகத் தெரியவில்லை. தருமபுரத்தார் பெரிய கோயில்களில் அதிக ஆடம்பரம் செய்துவிட்டு இச்சிறு கோயில் மூர்த்திகளை வெளவால் அபிஷேகத்திற்காக ஒதுக்கி விட்டார்களோ எனப் பரிதாபப்பட வேண்டியிருக்கிறது. மூர்த்திகள் நல்ல திருவுருவங்களாக இருந்தும், யாவும் பச்சை நிறக் களிம்பாகவே காட்சியளிப்பது வருந்தத் தக்கது.

விழா :- எந்த விழாவும் நடைபெறவில்லை.

வரலாறு :- அனேக வரலாறுகள் இத்தலத்தில் சொல்லப் படுகின்றன. பரசுராமர் வரலாறு, காமதேனு

பால் சொரிந்து ஆட்டிய செய்தி, இந்திரன் வழிபாடு, அகத்தியர் வழிபாடு ஆகியவற்றைச் சுந்தரர் தேவாரத்தில் சொல்கிறார். பரசுராமர் தம் தாயைக் கொன்ற பாவம் நீங்க இங்கு தம் பெயரால் லிங்கம் ஸ்தாபித்து வழிபட்டார். மேலும் இங்கு முந்நூறு வேதியரைக் குடியேற்றி அவர்களுக்கு முந்நூற்றறுபது வேலி நிலமும் கொடுத்து வழிபாட்டுக்கு ஏற்பாடு செய்து ஆண்டவனுக்குத் திருநின்றியூர் கிராமத்தையும் சேர்த்தார். இச்செய்தியைச் சுந்தரர் கூறுகிறார். விருத்திராசுரனைக் கொல்ல வேண்டி இந்திரன் ததீசி முனிவருடைய முதுகெலும்பை யாசித்துப் பெற்று எலும்பு சதையை விட்டு நீங்கி வாராமையால் காமதேனுவை அழைத்துச் சதையை நக்கச் சொன்னான் என்றும், இப்பாவம் நீங்க வேண்டிக் காமதேனுவானது ஒரு புற்றினடியில் எழுந்தருளியுள்ள இறைவனுக்குப் பால் சொரிந்து ஆட்டி வழிபட்டும், இந்திரன் தனியே வழிபட்டும், பாவம் நீங்கப் பெற்றனர் என்பதும் வரலாறு. அகத்தியர் இத்தலத்தில் வழிபட்டுப் பொதிகை வாழ்வு பெற்றார். விசாரசர்மன் என்ற ஓர் அந்தணன் தன் மனைவி கமலை என்பாளை விட்டுப் பிரிந்து காசியாத்திரை சென்று திரும்பிவந்து தன் மனைவியோடு பேசியிருந்துவிட்டு இரவு திண்ணையில் படுத்து உறங்க, சேவகரால் அறிந்த அந் நாட்டரசன் அன்னியன் என இவனை எண்ணி வெட்டிவிட்டான். இதனால் அவன் பிரம்ம ஹத்தி பிடித்து அலைந்து திரிகையில், ஓர் இடையன் மூலம் இவ்வூர்ப்புற்றில காமதேனு பால் சொரிந்து வழிபடுவது கேள்வியுற்று, இவ்வதிசயத்தை அறிய எண்ணி ஆட்களை விட்டு நாள் முழுதும் வெட்டிப் பார்த்தும் கூட ஆட்கள் சோர்ந்து விட்டனர். பிறகு அரசன் தானே மண்வெட்டியை வாங்கி வெட்டிப்பார்க்கும் போது, ரத்தம் பீறிட்டு அடித்து அவ்விடத்தில் சிவலிங்கத்தைக் கண்டு அங்கு கோயில் அமைத்து வழிபட்டான். அவனது பிரம்மஹத்தி தோஷம் பாதி இவ்வூரிலும் பாதி திருவிடைமருதூரிலும் நீங்கிற்று. பிருகு முனிவர், சாத்துவிக குணமுடையவர் என்று திருமாலைத் தேர்ந்து, அவருக்காக இங்கு ஒருயாகம் செய்ய,

திருமால் இங்கு லக்ஷ்மி சமேதராக வந்து அவியேற்றமை யால், ஊருக்கு லக்ஷ்மிபுரம் என்றும் சுவாமிக்கு லக்ஷ்மி புரேசுவரர் என்றும் பெயர்கள் உண்டாயின. இதனுல் போலும் இங்கு திருச்சுற்றில் திருமால் எழுந்தருளியிருக் கிறார். லக்ஷ்மி பூசித்ததாகவும் வரலாறு உண்டு. திரு நிலை பெற்ற காரணத்தால் திருநின்றியூர், திருநின்றவூர் என்று பெயர் சொல்வார்கள். அன்றியும் முற்கூறிய அரசன் தீவர்த்தி பிடிக்கச் செய்து இவ்வூர் வர, ஊர் எல்லையில் தீவர்த்திப் பிரகாசம் அணைந்து, சிவலிங்கத்தில் பேரொளி தோன்றி அதன் பிரகாசம் எங்கும் நிறைந்தது; மீண்டும் ஊர் எல்லையைக் கடந்ததும் தீவர்த்தி எரியத் தொடங்கிற்று; இதனுல் இது திரிநின்றஊர் என்று ஒருகதை சொல்வார்கள்.

பாடல் :- சம்பந்தர் பதிகம், "நின்றியூரில் உறையும் இறை அல்லது எனது உள்ளம் உணராதே" என்று பாடு கிறார். அப்பர் ஒரு குறுந்தொகை பதிகம், 'அஞ்சியாகிலும் அன்பு பட்டாகிலும் நெஞ்சம் வாழி நினை நின்றியூரை நீ" என்று அவர் இவ்வூரில் பாடினர். சுந்தரர் இரண்டு பதிகங் கள்; பல வரலாறுகளை அவர் குறிப்பிடுகிறார்.

கோச்செங்கணுன் வரலாறு, அப்பர் சுவாமிகள் 4900 பதிகங்கள் பாடினர் என்ற வரலாறு போன்றனவும் இவரால் சொல்லப்பட்டுள்ளன. "செங்கண் மாமலர்த் திருமகன் மருவும் செல்வத் திரு நின்றியூர் அரனே" என்று சுந்தரர் பாடியுள்ளமையால், திருமகள் இங்கு வழிபட்டாள் என்று பெரியோர் கருதுவர்.

கல் வெட்டு : இவ்வூரில் பல கல்வெட்டுகள் இருந்து அவற்றைத் திருப்பணியின் போது கலைத்தும், அழித்தும், மாற்றியும் அடுக்கி விட்டார்கள் என்று தெரிகிறது.

ஒரு திருவாசகச் செய்யுளுரை

(பாம்பனடிகள்)

இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத்
 தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் றன்மை நினைப்பற நினைந்தே
 னீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாந்
 திருப்பெருந் துறையுறை சிவனே
யொன்றுநீ யல்லை யன்றியொன் றில்லை
 யாருன்னை யறியகிற் பாரே,

எனும் திருவாசகத்தையும் ஈண்டுணர்ந்து கொள்க. இதனில்,

"நின்றன்மை நீயலாற் பிறிது மற்றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாந்
திருப்பெருந் துறையுறை சிவனே"

என்பது—"திருப்பெருந்துறையின் கண்ணெழுந்தருளிய சிவபெருமானே! உனது தன்மையானது ஒருங்கியைந்து நிற்குமுனக்கு வேறாகச் சீவான்மா வென ஒன்றில்லாத தன்மையே; என்னை? தூலதேகத்தோடு கூடி நின்ற அஃது உள்ளுறை யுடம்பாகிய சூக்குமத்தை யெய்தி, பின்றை அதன் உள்ளுறை உடம்பாகிய காரணத்தை எய்தி, ஆண்டாணவ மலத்திற் கட்டுண்ட தனது அணுத் தன்மை ஈற்றென் றறிந்தவாறதனிலழுந்தி, அவ்வாணவ இருளோடும் விராய தற்போதமென்னும் அத்தன்மையி னின்றுங் கன்மானுபவத்தினின்றுந் தேய்ந்து தேய்ந்து, ஒரு பொருளென்னும் பரம்பொருளுண்மையை யுள்ளபடி யெய்தும் பொருளாயிருத்தலின்" எனு மருத்தத்தைப் பயக்கும். உடம்பெல்லாம் மாயாமலமாதலின் இங்ஙனம் மும்மலமுங்கடந்து ஒன்றுமென்பது கருத்து. ஒன்றும்=ஒரு பொருட்டன்மையுறும். "ஒன்றெனப்படுவது வீடு பெறலே" என்று பிங்கல நிகண்டு கூறு நெறியானே வீடு பேறெய்தும் என்பது இரட்டுற மொழிதலென்னும் உத்தி

யாற் கொள்க. ஈண்டுச் சென்று சென்றெனும் இரண்டனையுஞ் சூக்குமதேகத்துங் காரண தேகத்தும் இயைக்குமாறு தேய்ந்து தேய்ந்து எனும் இரண்டனையும் ஆணவ மல தற்போதத்தும் கன்ம மல அனுபவத்தும் இயைக்க. சதசற் பிரபஞ்ச வத்துக்களி லெதுவு நீ யல்லை; நின்னை நீங்கித் தனியிருக்குந் தன்மையும் அவையற்றி லெதற்கு மில்லையெனச் சீவனதுயர்வுடைமையையும் ஏனையவற்றி னிழிவுடைமையையும் அத்துவித வியாபக வியாப்பியத்தில் வைத்து விளக்க வுள்ளது—"ஒன்று நீ யல்லை அன்றி யொன்றில்லை" எனும் சொற்றொடரென்க.

(குறிப்பு:—இவ்வுரை ஸ்ரீமத் சுவாமிகளால் எழுதப்பெற்ற 'பரிபூரணானந்த போதம்' என்னும் நூலில் காணப்படுவது. துணையாசிரியர்)

உ

வரம் வேண்டல்

நெல்லை. R. S. இராமலிங்கம்

கருதும் அடியார்கள் கோடி குறை கூறினாலும் முனிய அறியாத பெருமானிடம் ஆயிரம் பேர்கள் ஆயிரம் கேட்பார்கள். திருமணம் ஆகவேண்டும் என்று துதிப்பார் சிலர்; மகப்பேறு வேண்டும் என்று வழிபடுவார் சிலர். பட்டமும் பதவியும் வேண்டும் என்று பணிவார் பலர். எந்நாளும் வறுமையின்றி செல்வமாய் வாழவேண்டும் என்று வேண்டுவார் உலக மக்கள்! இவ்விதம் அவரவர்கள் விரும்பும் வரங்களை ஆண்டவனிடம் வேண்டுவது மக்கள் இயல்பு.

"அப்பா நான் வேண்டுதல் கேட்டு அருள் புரிதல் வேண்டும்; ஆருயிர்கட் கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்" என்று அருட்பிரகாச வள்ளலார் வேண்டுகிறார். "அன்பின் வழியது உயிர்நிலை அஃதில்லார்க்கு

என்புதோல் போர்த்த உடம்பு'' என்றபடி, அன்பின் பெருமையை அறிந்த வள்ளலார் எவ்வுயிரையும் தம்முயிர் போல் எண்ணி ஆருயிர்கட் கெலலாம் அன்பு செயல் வேண்டும் என்று வேண்டுகிறார். இரக்கமே வடிவானவர் இராமலிங்க அடிகள்.

1. கொடைவள்ளல்

கொடையிற் சிறந்த கண்ணன் இரப்பவர்க்கு இல்லை என்னமல் ஈந்து வந்தான்! 'கொடைக்குக் கர்ணன்' என்று கூறுவார்கள்.

அன்றறிவாம் என்னுது அறஞ் செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றுத் துணை.

என்னும் மெய்ம்மைக்கு மெய்யுருவானவன் கர்ணன். இடைவிடாது செய்த தருமத்தின் பயனுல் இவ்வுலகில் நிலைத்து நிற்கும் உயர் உடம்பைப் பெற்றுன். பாரதப் போரில் விசயன் விடுத்த வெங்கணையால் ஆவி சோர்ந்து நிலத்தில் விழுந்தான். அவனது உயிர் உடலை விட்டுப் பிரியாது நின்றது!

எல்லாம் அறிந்து எங்கும் நிறைந்து என்றுமுள்ள பரம்பொருளை அடியவர்கள் "புண்ணியர்'' என்று அழைப்பதும் இக்கருத்தை விளக்குவதேயாகும். புண்ணி யஞ் செய்தவர் நிலைதத உடம்பைப் பெறுவர் என்பது வேதவாக்கு.

ஒரு சமயம் கண்ணபிரான் ஏழைப் பிராமணனுக வந்து நின்று "ஏதேனும் கொடு'' எனறு யாசித்தான். வந்தவருக்கெல்லாம் வாரி வாரி வழங்கும் நாளில் வராது ஆவி சோர்ந்த நிலையில் என்னுல் ஆவது என்ன? என்று கேட்கவும், "நீ செய்த புண்ணியம் அனைத்தும் உதவுக'' என்று வேண்டினுன் கண்ணபிரான். உடனே கர்ணன் உள்ளம் மகிழ்ந்து, தன் மார்பில் பாய்ந்த அம்பை உருவி அதிற் படிந்த இரத்தத்தால் தாரை வார்த்து என் புண்ணியம் அனைத்தும் தந்தேன்; நீ கொள்க இனிப் பூவில் வாழ் அயனும் உனக்கு நிகாலன்'' என்று வாழ்த்தினுன்!

அந்தணர் வடிவில் நின்ற கண்ணபிரான் அன்புடன் ஏற்றுக் கொண்டு, அவ்வரிய செயலுக்கு மிகவும் மகிழ்ந்து "உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்" என்று உரைக்கவும், வீழ்நாள் படாமலினிது ஈத்து வந்த வள்ளல் வரம் வேண்டுகிறார்.

அல்லல்வெவ்வினையால் இன்னம் உற்பவம்
உண்டாயினும் ஏழெழு பிறப்பும்
இல்லையென் றிரப்போர்க்கு இல்லையென்றுரையா
இதயம் நீ அளித்தருள் என்றான்

"வினையின் பயனால் இன்னமும் பிறவி ஏற்படுமாயின் ஏழெழு பிறப்பும் இல்லை என்று வந்தவர்க்கு இல்லை என்று சொல்லாத இதயம் தந்தருள வேண்டும்" என்று வரம் வேண்டினான். இவ்விதம் இரப்போர் கடலை ஈந்தே கடந்த வள்ளல் இறக்கும்போதும் ஈவதையே விரும்பினான்.

2. கற்பு மங்கை

ஆருயிர் நாயகனைப் பிரிந்து அசோக வனத்தில் அரக்கியர் சூழ இருந்த அன்னை சீதையானவள் மனம் வருந்தி இராமனைக் காணலாம் எனும் ஆசையில் வெறும் நீரையே பருகி உயிர்வாழ்ந்தாள். காலங்கடந்து செல்வதை நினைந்து கண்ணீர் சொரிந்து தன் உயிரைவிட எத்தனிக்கும் வேளையில் "இராமநாமத்தைச் சொல்லிக் கொண்டு அனுமன் அங்கே வந்து அடிபணிந்து கணையாழியைக் கொடுத்து உயிரைக் காப்பாற்றினான். தேவியைப் பிரிந்த இராமன் துயருற்றுத் தயங்கும் நிலையை விளக்கி "விரைவில் வந்து மீட்டுச் செல்வார்" என்று அன்னைக்கு ஆறுதல் கூறினான். உயிர்காத்த உத்தமனாய் விளங்கிய அனுமனின் உண்மை அன்பினால் ஆறுதல் அடைந்து அடையாளமாகச் சூடாமணியைக் கொடுத்து இன்னுயிர் இராமனுக்குச் சில செய்திகள் சொல்லும்போது, இறுதியாக இராமனிடம் ஒரு வரம் வேண்டுவதாக அனுமனிடம் உலக மாதாவாகிய சீதாபிராட்டியார் சொல்லும் வார்த்தைகள் இங்கு சிந்திக்கத்தக்கன : அவைகள் மெய்சிலிர்க்கும் பொன்மொழிகள் !

ஈண்டு நான் இருந்து இன்னுயிர் மாயினும்
மீண்டு வந்து பிறந்து தன் மேனியைத்
தீண்டல் ஆவது ஓர் தீவினை தீர்வரம்
வேண்டினுள் தொழுது என்று விளம்புவாய்.

"ஒரு வேளை இராமபிரான் விரைவில் வந்து மீட்டுச் செல்லாத காரணத்தால் என்னுயிர் இங்கே பிரிய நேருமாயின், திரும்பவும் பூமியில் பிறந்து அவர் திருமேனியைத் தீண்டுவதாகிய தீவினை தீர்வரம் தொழுது வேண்டினுள்" என்று வரம் வேண்டும் உத்தமி சீதையை என்னென்று ஏற்றிப் போற்றிப் புகழ்ந்து வருணிப்பது? ஆகவே கற்புடைய மங்கையர் கணவனைப் பிரியாத வரத்தையே வேண்டுவர் என்பதைச் சீதாபிராட்டி ஆகியோரால் அறிந்தோம்.

3. அடியார்கள்

இனி இறைவனிடம் இடையருத அன்பு செலுத்தும் அடியவர்கள் எவ்வித வரம் வேண்டுகிருர்கள் என்பதைக் கவனிப்போம்.

"புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என்மனத்தே
வழுவாதிருக்க வரந்தரவேண்டும் இவ்வையகத்தே!"

என்று நலஞ்சிறந்த நாவுக்கரசர் நம்பெருமானை வேண்டுகிருர். சாந்துணையும் சிவனடியே சிந்திக்க வேண்டும் என்பதுதான் சமயாச்சாரியர்கள் சைவ மக்களுக்குச் சொல்லியுள்ள சன்மார்க்க போதனையாகும்.

தலையால் நடந்து தலைவனைக் கண்ட காரைக்கால் அம்மையார், அம்மையே! என்றழைத்த இறைவனிடம் இறவாத இன்ப அன்பு வேண்டி இனிப் பிறவா நெறிவேண்டும் பிறப்பு உண்டேல் உன்னை என்றும் மறவாமை வேண்டும் என்று வரம் வேண்டினுர்கள்.

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின்
வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்
உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான்
மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும்போது உன்னடியின்கீழ்
இருக்க என்றார்

இறைவனும் அவ்விதமே அருள் செய்தான் என்று வரலாற்றால் அறிகிறோம்.

எனவே, ஆருயிர்கட்கெல்லாம் அன்பு செயல் வேண்டும் என்று வள்ளலார் வேண்டுகிறார். நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். இறக்கும்போதும் கர்ணன் ஈவதையே வேண்டினான். இனியொரு பிறவி எடுத்தாலும் இராமன் திருமேனியைத் தீண்டவேண்டும் என்று சீதாபிராட்டி வரம் வேண்டினாள். சிவனடியார் யாவரும் "பிறவாமை வேண்டும்; பிறப்பு உண்டானால் பெருமானை மறவாமை வேண்டும்" என்று வேண்டுகிறார்கள். இவ்விதம் அவரவர் மனநிலைக்குத் தக்கபடி வரம் வேண்டும்போது குமர குருபரர் இறைவனிடம் வேண்டும் வரம் மிகவும் வியப் பாக அமைந்துள்ளது. அவர் வேண்டும் வரம் என்ன? அனைவரும் வேண்டாத வரத்தை அவர் வேண்டுகிறார்!

4. குமரகுருபரர்

திருச்செந்தூர் முருகன் திருவருளால் ஊமைத் தன்மை நீங்கப் பெற்று ஐந்தாவது வயதில் 'கந்தர் கலி வெண்பா" பாடியருளிய குமரகுருபரர் தில்லை இறைவனை வணங்கி ஒரு வரம் வேண்டுகிறார்.

மல்லலம் பொழில்சூழ் தில்லை வாண
வரம்ஒன்று இங்கு எனக்கு அருளல் வேண்டும்!

என்ன வரம்? "அடியேனுக்கு நல்ல ஆடை வேண்டாம். நல்ல இடம் வேண்டாம்; நல்ல உணவும் வேண்டாம்" என்பதுதான் அவர் விரும்பும் வரம்.

"பெருங்குளிர்க்குப் போர்த்திக் கொள்ள அழுக்குத் துணிகள் பல தொகுத்து இசைத்த பழங்கந்தை ஒன்று போதும்; ஒன்றுக்குமேல் வேண்டியதில்லை. படுத்துறங் கப் பாழடைந்த வீட்டுப் பின்புறம் உள்ள திண்ணை அல் லது வேறு இடம் இல்லையாகவேண்டும். கடும்பசிக்கு உப்பு இல்லாத கூழன்றி வாய்விட்டுக் கேட்டாலும் நல் லுணவு கிடைக்கக்கூடாது! ஆனால் ஒழுக்கம் நிறைந்த அறிவுடைய மெய்த்தவ அடியார்கள் திருக்கூட்டத்தோடு சேர்ந்து தினமும் நான் இன்புற்று இருக்க வேண்டும். உடலில் உயிருள்ள அளவும் இத்திறம் அருளி நான் இரந்து கேட்பினும் நின திருவடியின்றி வேறொன்றும் அருளாதிருத்தல் வேண்டும்" என்று தில்லைவாணரிடம் வரம் வேண்டுமுறை சிந்தித்து உணர்வதற்கு உரிய சிறப்பு உடையது.

வறுமையான வாழ்வுதான் இறைவழிபாட்டிற்குத் துணைபுரியும் என்று இத்தகைய வரம் அருளல் வேண்டும் என்று குமாருகுருபரர் தில்லைப்பெருமான் திருவடியைத் தொழுது வேண்டுகிறார். உலக மக்கள் விரும்பும் செல் வத்தைத்தான் விரும்பாது, இன்பம் தரும் இறைவனை இமைப்பொழுதும் மறவாமல் இருப்பதற்காக வறுமை யான வாழ்வைத் தந்து அருளும்படி அவர் விரும்பிக் கேட் பது நம்மனோர் உள்ளத்தை உருக்குவதாகும்.

பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை; பணமில்லாத வன் பிணம். இந்நிலைக்கு மாறாக ஆயுள்கால மெல்லாம் வறுமையான வாழ்வைப் பெற்று வாழ அருள் புரிய வேண்டும் என்று பற்றெல்லாங்களையப் பற்றற்றான் தாளைப் பணிகின்றார் மெய்ஞ்ஞானகுரு குமரகுருபரர்.

வடிவுந்தனமும் மனமுங் குணமும்
குடியுங் குலமுங் குடிபோகியவா
அடியந்தமிலா அயில் வேல் அரசே
மிடியென்றொரு பாவி வெளிப்படினே!

கொடிது கொடிது வறுமை கொடிது! வறுமையை நினைக் கவும் அஞ்சுகிறார் அருணகிரிநாதர்! மிடியென்றொரு பாவி

என்று மனம் பொருமல் கொடிய மொழியைக் கவியில் அமைத்துள்ளார். குடியைக் கெடுப்பது மிடி. வடிவைக் கெடுப்பது மிடி. மனமுங் குணமும் மாறி குலப்பெருமையும் குன்ற வாழ்வைக் குலைப்பது மிடி. ஆதலால் அந்தப் பாவி அருகில் நெருங்காமல் இருக்க வேண்டும் என்று அயில்வேல் அரசன் திருவடியைத் தொழுது வேண்டுகிறார் அருணகிரியார்!

இங்கே குமரகுருபரர் தில்லைக்கூத்தனை நோக்கி கொடிய வறுமை வேணடும் என்று கூசாமல் வேண்டுகிறார்!

> பெருங் குளிர்க்கு உடைந்த காலைக் கருந்துணி
> பலதொகுத்து இசைத்த ஒரு துணி அல்லது
> பிறி தொன்று கிடையாது ஆக; வறுமனைக்
> கடைப்புறத் திண்ணை அல்லது கிடக்கைக்கு
> இடம் பிறியாது இல்லையாக; கடும் பசிக்கு
> உப்பு இன்றி அட்டபுற்கை ஊண் அல்லது
> மற்றோர் உண்டி வாய்விட்டு அரற்றினும்
> ஈகுநர் இல்லையாக.

என்ன வியப்பு! நால்வகை உணவு அறுவகைச் சுவையுடன் நாளும் உண்டுகளிக்கும் செல்வர் வீட்டுக்கு ஒருவேளை இவர் சென்றால், அங்கே உணவில்லை என்று அவர்கள் சொல்ல வேண்டும்! என்று ஆசைப்படுகிறார் குமரகுருபரர். செல்வம் வந்துற்றபோது தெய்வமுஞ் சிறிதுபேணார்; சொல்வன அறிந்து சொல்லார்" என்றபடி செல்வததால் மக்கள் வாழ்க்கை சீரழியும் நிலை கண்டு, கடும்பசிக்கு உப்பு இன்றி அட்ட புற்கை ஊண் கிடைத்தால்போதும் என்று அவர் விரும்புகிறார். இனி அவர் வேண்டுவது யாதெனில்,

> ———————— நான் நாளும்
> ஒழுக்கம் நிறைந்த விழுப் பெருங் கேள்வி
> மெய்த்தவர் குழாத் தொடும் வைக, இத்திறம்
> உடல் நீங்கு அளவும் உதவிக் கடவுள்நின்
> பெரும் பதம் அன்றியான் பிறி தொன்று
> இரந்தனன் வேண்டினும் ஈந்திடா ததுவே,

ஆகவே, வறுமையான நிலையில்தான் இறைவனை மறவாத மன நிலை அமையும் என்று, குளிருக்கு ஒரு கந்தையும், கிடக்கைக்குப பாழடைந்த வீட்டுப்புறந் திண்ணையும், கடும்பசிக்கு உப்பு இல்லாத கூழும் கொடு; ஒரு நாள் ஒரு பொழுதாவது நல்ல உணவு வேணடும் என்று வாய்விட்டு அரற்றினாலும் ஈகுநர் இல்லையாக என்று அவர் வேண்டு வது ஒருவகையில் வியப்பையே தருவதாகும். பங்களா வீட்டுத் திண்ணையில் படுத்தால் ஆடம்பர வாழ்க்கையைப் பார்க்க நேரும் என்று அஞ்சி பாழடைந்த வீட்டுப் புழக் கடையில் படுத்துறங்க விரும்புகிறார் போலும் பரம ஞானி குமரகுருபரர். இவர் வரதத்தின் சிறப்பு சிந்தித்துச் சிந்தித்து இன்புறுதற்குரியது. ஆகவே வறுமையான வாழ்வு பகவானை மறவாது தியானிக்க உறுதுணை புரிய வல்லது என்பதை மனத்துட் கொள்க! அந்நிலையுற்றாலும் அதற்காக வருந்தாமல் இறைவன் திருவடியை நினைத்து இன்பமடையச் செய்யவல்லது அவ்வாழ்வு என்பது கருதத் தக்கது.

சமயப் பகுதி

பூம்பாவையார்

வித்துவான் சி. குமரேச பிள்ளை.

(சென்ற இதழின் தொடர்ச்சி)

சிவநேசர் தம்மையே உள்ளவாறுணர்ந்தவர். பதிபசு பாச இயல்பினையும் ஞானசம்பந்தப்பெருமான் பெரு நிலையையும் நன்கறிந்தவர். எனவே, பூம்பாவையாரின் உயிர் உடலினின்றும் நீங்க, அவ்வுடலை எரித்து, பஞ்ச பூதங்களுள் நுண்மையாகக் கலந்தவை போக எஞ்சிய வற்றைக் குடத்துள் பெய்துவைத்தார். ஆகவே அம்மை யாரின் உடற்பகுதிகள் பஞ்சபூதப் பகுதிகளுள்ளும் குடத்துள்ளுமாயமைந்திருந்தன. அவற்றுள உறைந் திருந்த பூம்பாவையாரின் உயிர் வினைமுற்றும் நீங்கிய தன்றாகலின், சிவத்தைச் சார்தலின்றியும்; ஞானசம்பந்தப் பெருமானுக்கென்று தாமுரிமைப் படுத்தியமையால் மறு பிறவியெய்தாமல் நுண்ணுடலுடன் கூடி வாழ்வதையும்

உணர்ந்தார். எனவே நுண்ணுடலோடு கூடியிருக்கின்ற பூம்பாவையாரின் உயிரையெண்ணிச் செய்யவேண்டுவன வற்றை எலும்பும் சாம்பலும் நிறைந்த அக்குடத்திற்குச் செய்துவந்தார்.

ஒரு காலங்காட்டியின் இயந்திரப் பகுதிகள், பிரிக்கப் பட்டாலும் அதன் நுட்பம் அறிந்தவன், அவற்றை ஒன்று சேர்த்து முன்னையதிலும் சிறப்பாக ஆக்க இயலும். அது போல பிரிக்கப்பட்ட பருவுடற் பகுதிகளையும் உயிரையும், அவற்றின் நுட்பம் அறிந்த ஏற்ற ஆற்றலுடைய ஒருவன் கூட்டுவிக்க இயலாதா? ஞானசம்பந்தப் பெருமான் பாசப் பொருளாகிய உலகதத்துவங்களுக்கெல்லாம் அப்பாற்பட்ட பரம்பொருளின் திருவடி நிழலிலே பண்டே திருவடி மற வாப்பான்மையோராய் வீற்றிருந்தவர்; சிவமாந்தன்மை யெய்தியவர்; எனவே, தாமும் காலம் நியதி என்னும் தத்துவங்களுக்கு அப்பாற்பட்டவராய் விளங்கினர். உடலுயிர்களைக் கூட்டுவிக்கின்ற சிவபெருமானின் திருக் கருணைவாய்க்கப்பெற்றவர். எனவே இறைவன் கருணைத் துணைகொண்டு காலம் நியதி இவைகளுக்குட்பட்ட பஞ்ச பூதங்களை யடக்கியாளுதலும், தத்துவங்களுக்குட்பட்ட நுண்ணுடலோடிருக்கின்ற உயிரையடக்கியாளுவதும் அவர்க்கு இயலாததொன்றோ? அவற்றைக் கூட்டிச் செயல்படுத்துவது அவர்க்கரியதாகுமோ? ஞானசம்பந்தப் பெருமானின் இத்திருவருள்நிலையையும் உள்ளவாறுணர்ந் தவர் சிவநேசர். ஆகவே சம்பந்தப்பெருமான் உடலையும் உயிரையும் கொடுப்பாரென்ற நம்பிக்கை அவர்க்கிருந்தது, அந்நம்பிக்கை வாய்க்கச்செய்ய வேண்டுவது, சிவாகமங் களின் அடிப்படையில் ஞானசம்பந்தரது கடமையாயிற்று எனவே சைவ ஆகமங்களின் உள்ளுறையை உறுதிப்படுத் தவும், சிவபெருமான் திருக்கருணையை உலகறியச்செய்ய வும், சம்பந்தராற்றிய அவ்வரிய செயல் அவர் போன்ற பெருமக்களால ஆவதொன்றே யாகும்.

பொலிவுடன் எழுந்த பூம்பாவையாரைக் கண்ட சிவ நேசர், புகலிவேந்தர் தாளகளில் வீழ்ந்து வணங்கினர். பணிந்துநின்றாள் மங்கை. பெருமான் சிவநேசரைநோக்கி "இம்மகளை மனைக்குக் கொண்டுசெல்லும்" என்றார். சிவ

நேசர் வணங்கி, ''அருமையால் அடியனேன் பெற்றபாவை யைத் திருமணம் செய்தருள்செய்ய வேண்டு''மென்றார்.

''நீர்பெற்ற பாவையா? அவள் அரவம் தீண்ட இறந் தாள். இவள், இறைவன் கருணையால் நாம் பெற்ற பாவை. மேலும் நும் சொல் மரபுக்கும் ஏலாதது' என்று வேதக்கருத்துக்களை எடுத்துக்காட்டி மறுத்தார்; தாம் இவ் வுலகில் தோற்றுவிக்கப்பட்டது பரசமயம் நீருக்குதற் பொருட்டேயன்றி இவ்வுலக வாழ்வில் சிக்கியுழல்வதற் பொருட்டன்றென்பதையும் எடுத்துக் காட்டினார். உணர்ந்த வணிகரும் அவ்விருப்பத்தைக் கைவிட்டார். பூம்பாவையாரை வேறொருவருக்கு மணம் செய்விக்க அவர் விரும்பவில்லை. கன்னிமாடத்துள் அமர்த்தினார். அக் கன்னியும் கன்னிமாடத்துள் வதிந்து, சிவத்தையேநினைந்து வாழ்ந்து நித்தியமங்கலமாம் பெருவாழ்வாகிய சிவத் தன்மையை யெய்தினாள்.

சுந்தரமூர்த்தி நாயனாரோடுள்ள மணம் தவிர்ந்த சடங்கவியார் மகளார், சுந்தரரையே தெய்வமாக எண்ணி வழிபட்டு வந்தார். கலிப்பகையாரோடு மணம் தவிர்ந்த திலகவதியார் உயிர்விடத் துணிந்தார். ஆனால் பூம்பாவை யார் இவ்விரு இயல்புகளுக்கும் மாறுபட்டவராய் பரம் பொருளாம் சிவத்தையே யெண்ணி வாழ்ந்தார். முன்ன வர் இருவரும் பெற்றோர் மூலமாக மணத்திற்கு உட்பட்ட வராயும் விரும்பியவராயுமிருந்தனர். பூம்பாவையாரோ அத்தன்மைபெற்றவரல்லர். இறைவன் கருணையை முத லாகக்கொண்டு சம்பந்தப்பெருமான் திருப்பாடலாற்றலால் தோன்றிய பூம்பாவையார் சம்பந்தப்பெருமானைக் குரு வாகவே கண்டார். குருவருள் பெற்ற பேற்றினாலும், வினைத்தொடர்பு முற்றும்கழிய சிவ உணர்வுகைவரப் பெற்றார். சிவத்தையே உன்னினார்; சிவானந்தப் பெரு வாழ்வு எய்தினார். 'பூம்பாவையார்' என்று உலகவர் போற்றுதலையும் வணக்கத்தையும் பெற்றவராகி இன்றும் மயிலைக் கபாலீச்சரர் ஆலயத்தில் கோயில் கொண்டருளி யிருக்கின்றார். பூம்பாவையாரைக் கற்றவர் கேட்டவர் சிந்தித்தவர் வானவர் சம்பந்தராவார் என்பது சம்பந்தர் திருவாக்கு. அப்பேற்றிற்குரியவராவோமாக.

திருச்சிற்றம்பலம்.

உ

கருணையந்தாதி

வித்துவான், வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர்.

கொங்குநாட்டில் மிகவும் பிரசித்திபெற்ற சிவலிங்கங்கள் ஏழனுள் ஒன்று அவிநாசிலிங்கம். அவிநாசிலிங்கம் புக்கொளியூரில் இருப்பதால் புக்கொளியூருக்கு அவிநாசி எனப்பெயருண்டாயிற்று. அவிநாசிலிங்கத்தின் வலப்பாகத்தில் அருளே வடிவமாய் அமர்ந்திருப்பவள் பெருங்கருணாலயச்செல்வி. அச்செல்வியை "புக்கொளியீசர் பெருங்கருணாலயச்செல்வி," என்றுபழைய கொங்குமண்டல சதகமும், புக்கொளியூர் நிலை செய்ஞானப் பெருங்கருணாலயச் செல்வி, என்று தலபுராணமும் போற்றுகின்றன. பெருங்கருணாலயச் செல்வியின் பெருமை கூறும் பழையபிரபந்தங்களில் ஒன்று, கருணையந்தாதி. இது நூறு செய்யுட்களாற்பாடிய கலித்துறையந்தாதி. "அந்தமுதலாகுதலந்தாதி" என்பது இலக்கணசூடாமணி, 10. இவ்வந்தாதி மண்டலித்துப் பாடப்பெற்றது. தெய்வப் பாடாண்வகையைச் சார்ந்தது. அம்பிகையின் அருள் பெறுதலில் விழைவுடையோர் விருப்பிப்படித்தற்குரியது. இனியசெம்பாகமான பாடல்களையுடையது. இதன்கண் பெருங்கருணாலயச் செல்வியின் திருவுருவச்சிறப்பு. தியானிப்போர் பெறும் பயன்கள், தலச்செய்திகள் முதலிய பல பொருள்கள் நன்கு கூறப்பட்டுள்ளன.

இந்நூலாசிரியர் கருணைதாசர் என்பவர். 80-ஆண்டுகளின் முன்பு வாழ்ந்தவர். இவர்பாண்டிநாட்டிலுள்ள வாசுதேவநல்லூரிற் பிறந்தவர். இவரது இயற்பெயர் முத்துசாமிக்கவிராயர். இவர் கொங்குநாட்டிலுள்ள அவிநாசியையடைந்து கருணாம்பிகையை வழிபட்டுக் கருணைதாசர் என்னும் காரணப்பெயர் பெற்றவர். இவரியற்றிய வேறு நூல்கள், கருணாம்பிகை பிள்ளைத்தமிழ். புக்கொளியூர் மாலை, முருகபுரிமாலை என்பன. ஏட்டுவடிவில் அழிந்து வரும் நிலையிலுள்ள இந்நூலை அன்பர்கள் அறியுமாறு சித்தாந்தத்தில் வெளியிடுகின்றேன்.

காப்பு

தேக்குஞ் சுவைத்தண் டமிழ்க்கவி வாணர் செவிக்கமுத
மாக்கும் பொருளு மலங்கார மும்மர வாலுதரம்
வீக்கு மொருத்தன் முகத்தோனென் னுவின்மிகுமதுர
வாககுர்தருவன் கருணையந்தாதி வழுத்துதற்கே.

நூல்

திருவும் பிறையுந் திகழ்வா ணுதலுந் திலகமுஞ்சேல்
பொருவுங் குழையு மணிமே கலையும்பொற் பூணும்பெம்மான்
சருவுந்தனமுங் கருணும் பிலைகயிரு தண்சிலம்பு
மருவுஞ்சரணமு மென்னுயிர் காக்க வருந்துணையே. 1

சருவும்—அணையும்.

வருந்தித் துதிக்கு மிராவும் பகலுமென் வாய்மலர் தூய்த்
திருந்தித் தொழுங்கை யிணைசெவிநாளுந் திருப்புகழிற்
பொருந்திப் பரம சுகானந்தநீர்கண் பொழியுமும்பர்
மருந்திற் சிறந்த பெருங்கருணாலய வல்லியையே. 2

வல்லியை யுந்தன மின்னைத்தென் காசி வடகயிலை
வல்லையைப் பாகங் கரந்தானை யாகம வேதமெல்லாஞ்
சொல்லிய தேவியை யல்லாமலோரெழு தொல்பிறவி
புல்லிய துன்ப மொழித்தற்கு வேறு புகலில்லையே. 3

இல்லைக் கிழத்தியை வாழ்வைச் சிறூரை யிருநிதியின்
றொல்லைத் துயரை யொழியாதென் புக்கொளிச் சுந்தரிதன்
னெல்லைக்கு ளோடி வலஞ்சூழ்ந் துருகி யெதிர்பணிந்த
தில்லைப் பிறப்பினின் றெவ்வாறு நீகடைத் தேறுவதே 4

தேறு மனமுந் தெளியா மதியுந் திருவடிக்கண்
ணூறுக் கருத்து மொழியாக் கவலையு முள்ளமட்டும்
மாறு திருத்த லழகோசொல் பெற்றவ ணீயலவோ
மாறுக் கருணை விளக்கே யிமய மடக்கொடியே. 5

கொடியா ருயிர்மலைக் கோதண்டம் வாங்கிக் குடித்தசடை
முடியா ரொடுநெடு மால்விடை யேறித்தன் மூரல்கொண்டு
கடியார் கருங்குழற் கண்மணி யேவந்து காத்தருள்செய்
யடியார் குழாதொடு மென்னுயிர் போம்பொழு
தஞ்சலென்றே 6

அஞ்சலென் றேங்கு மபயமும் பாசமு மங்குசமுந்
தஞ்சமென் றேருக் கருள்வைத்த நாட்டமுந் தாளிணைப்பூங்
கஞ்சமுங் கஞ்சத்தின் மேலே கிடந்த கதிர்ச்சிலம்பும்
நெஞ்சமொன் றுகநினைவார்க் கிலைச்சென்மம் நீணிலத்தே 7

நிலத்திற் பெருந்தவஞ் செய்தன மேநெஞ்ச மேநெடுநாட்
சலத்தைச் சருகைக்கொண் டேதள்ளி நோற்குந்தவர்
கட்கெல்லாம்
பலத்தைச் சிறந்தருள் வாரண வாசிப் பரம்பரர்தன்
வலத்திற் புகுத்த கருணைப்பிராட்டியை வாழ்த்துதற்கே 8

வாழார் தொழுது மலர்தொடுத் தெம்பெரு மாட்டிபொற்றுள்
தாழார்மெய் யன்பரைத் தான்பணி யார்வளர் சன்னதிமுன்
சூழார் தினைப்பொழு தேனுமெய் ஞானச் சுகப்பெருக்கி
லாழாரென் செய்வரற் தோவருங் காலை யமபடர்க்கே. 9

படநாகந் தாங்கு மகவிடத் தாசையிற் பட்டுழலும்
மடநா யினும்புல்ல ளுயினும் வாரண வாசிப்பிரான்
உடனு டுறுங்கரு ணாலயச் செல்வி யுனக்கினிதான்
கடனுகு மெந்தனைக் கண்ணருள் பாலித்துக் காப்பதுவே. 10

காத்தாலுங் காப்பின்றிக் கைவிடுத் தாலுங் கடுநரகிற்
சேர்த்தாலுஞ் சொர்க்கந் திகழவைத் தாலுந் திருக்கண்மலர்ப்
பார்த்தாலு மன்பர் பராக்கினி லென்னைப் பராமுகமாய்
நீத்தாலுஞ் சொல்லிவைத் தேன்கதி யென்றைக்கும்
நீயெனக்கே 11

நீயே திருவருள் பாலிக்க வேண்டுங்கை நீக்கிவிட்டால்
நாயேற்கிங் கோர்பற்று மில்லைகண் டாய்கிரி ராசன்பெற்ற
சேயே பரந்த புவன சராசர செந்துக் கெல்லாந்
தாயே பெருங்கரு ணாலய வால சவுந்தரியே. 12

தரியே னகந்தையைத் தள்ளோன் சிவாகம சாரமென்றுந்
தெரியேன் குடும்பச் சிறைபடு வேன்கடைத் தேறசெய்வாய்
வரியே ரணிபுயத் தெண்டிசை யோரண்ட வாணரயன்
அரியே யெனுமன்ப ரஞ்சலி மாலை யணிபவளே 13

அணிமுடி சூடும்பல் லாயிர கோடியண் டத்தமரர்
மணிமுடி தாழ்க்தம்பொன் னூபுரச் சீறடி வல்விமனத்
தெணிமுடி யாத்துன் பிடர்படு வேனை யெடுத்தடியார்
பணிமுடி சூட வடிமைக்கென் றேவருள் பாலிப்பதே 14

பாலிற் சிறந்த பணிமொழி யேநின்பொற் பாடகப்பூங்
காலிற் சிறுதுகள் மாமுடி மேற்பட்ட காரணத்தால்
ஆலிற் சிறந்த பஞடைவிப் பார்முத லண்டமெல்லாம்
சேலிற் படைப்பதுங் காப்பது நான்முகன் சீதரனே. 15

சீத மதிக்குந் தணமிக்க நின்றன் றிருவடிப்பிர
சாத மதிக்குமென் மேல்வைக்க வீசன் சகித்திலனே
வேத மதிக்கு மணவம்மி மீது விமலனின்பொற்
பாத மிதிக்கப் பொருமலன் ஞேகரம் பற்றியதே. 16

பற்றார் புரங்குறு மூரலிற் காய்ந்தவன் பங்கில்வளர்
முற்று முகிண்முலை மொய்குழ லாளை முனிவர்தொழும்
வற்றாக் கருணை மணியைக் கருத்தினில் வைத்திறைஞ்சப்
பெற்றாரன் ஞேவற துதித்தத ஞற்பலன் பெற்றவரே 17

பெற்றவள் பிள்ளையைப் பேணு விடிலந்தப் பிள்ளைதன்மை
மற்றெவர் கட்குத் தெரியுஞ்சொல் லாயுன்னை வந்துதஞ்ச
முற்றவென் றுன்ப மொழிப்பாய் தவஞ்செய் துயர்ந்தவர்க்குங்
கற்றவர் கட்கு மருதே கருணையங் கற்பகமே 18

கற்பமுங் கற்பகக் காவும்வெண் மாவுங் கடவுளர்கள்
பற்பலர் சூழ்பத மும்பெறு வாரிடப் பாலைமுக்கட்
டற்பர ருக்குத் திருவவி நாசித் தலத்துதவுஞ்
சிற்பரை யைத்தினந் தோறும் பணிந்தன்பு செய்பவரே 19

(தொடரும்)

ஆவணித்திங்கள் சிறப்பு நாள்கள்

13 (29—8—70) பூசம்— செருத்துணை நாயனர் விழா
14 (30—8—70) ஆயிலியம் —புகழ்த்துணை நாயனர் விழா
" " — அதிபத்த நாயனர் விழா
15 (31—8—70) மகம் — இளையான்குடி மாற நாயனர் விழா
17 (2—9—70) உத்திரம் — மறைஞான சம்பந்தர் விழா
23 (8—9—70) அனுடம் — குலச்சிறை நாயனர் விழா
25 (10—9—70) மூலம் — குங்கிலியக் கலய நாயனர் விழா

திருமந்திரம் அரியவுரை

(வித்துவான் அம்பைசங்கரனுர்)

ஆசுஎ நாய களத்தி லிருப்பன
வாகிலுங் கூடாத வம்புலி யொன்றுண்டு
வாகிலுங் கூட வகப்படு மாயிடி
லாகவ ரீரா ரகத்தன தாமே.

(என்பது) ஆவ மண்டலத்தையும் அமுதத்தையும் உள்ளே யாக்கிக் கொண்டு நிற்கிற சுழுமுனைநாடியான பெருவழியிற் கூடாமலயலே திரிகிற சந்திரன் தனிண்டமான வாவ மண்டலத்திலே கூட்டிநிற்கிற பிராணனையிர்ந்து விடுவிக்கையே தொழிலான பஞ்சவாயுக்களு மித் தொழிலிறந்து கூடு வாரென்றே நிருபியு மென்று நெஞ்சொடு வியத்தல்.

இதில் ஆவன்ன என்பது மண்டலங்களாமறையுந் தன்னுள்ளே யாக்கிக் கொண்டு நிற்கிற சுழுமுனைநாடியானவனென்றபடி.

ஆய என்பது விசாரித்துக் கொள்ளென்றபடி.

களத்திலிருப்பன வென்பது பரமானந்த சுகத்தையும் சரீரத் திதி யையுந்தருகிற வமுதமிதினகத்தே யிருப்பனவாயிருக்குமென்றபடி.

ஆகிலுங்கூடாத வம்புலி யொன்றுண்டு என்பது இந்த வழியிலுங் கூடாமலயலே பார்த்துத் திரிகிற சந்திரனுகிற வழகிய வம்புலியு முண்டென்றபடி.

ஆகிலுங்கூட அகப்படு மாயிடில் என்பது ஆருனஇல்லிலே கூடும்படியாகப் படு மாயிடிலென்றபடி.

ஆகவ ரீரா ரகத்தனதாமே என்பது பிராணனே யிர்க்கிற முறைப்பட்டே தொழிலான பஞ்சவாயுக்களுமிம் முறைமை குன்றிப் பொருந்துவார்களென்றவாறு.

குறிப்பு:— இச் செய்யுள் சமாஜப்பதிப்பு முதலிய வெளியீடுகளில் இதுகாறும் காணப்படவில்லை.

அடியு முடியு மமைந்தொத் திருந்த
முடியினு ளங்கியை மூத்துடன் மூசக்
கொடியும் படையுங் கொலையானை யைந்து
மடிய வலம்புரி வாய்வைக்குந் தானே.

என்பது குருவசனத்தின் படி பிரணவத்தை யுச்சரிப்பார்க்கு இது தானே அடியும் முடியுமான சிரசிலே மூலத் திலக்கினியைக் கொண்டு செல்லுவதுவு...திறுடைய தேசத் தாலே மனுறியும் புலனும் பொறியும் ஈண்டொடுங்கும்படி யாய வதனலன்று பிரணவத்தின் பெருமையை வியந்து சொல்லியது.

இதில் ஆடியும் முடியும் அமைந்தொத்திருந்த முடியினுள் என்பது சரீரத்திலுண்டான சகலவியாபாரத்துக்கும் அடியு முடியுமாய் முடிந்த பதார்த்தத்துக்கு இருப்பிடமான சிரசினுள் ளென்றபடி.

அங்கியை மூத்துடன் மூச என்பது மூலத் திலக்கினியை முத்தி மார்க்கத்திலே செல்லும் படியாக வென்றபடி.

கொடியும் படையுங் கொலையாளை யைந்தும் என்பது மதங்களென்று சொல்லப்பட்ட மனுறதியும் தொழில் செய்ய கன்மேந்திரிய மாகிற படையும் பொல்லாவழியிலே கொடு போகவற்றுன பஞ்சேந்திரியங்களான ஆனையுமென்றபடி.

மடிய என்பது இவைதந்தந்தொழில் கெடும்படியாக என்றபடி வலம்புரி வாய்வைக்குந்தானே என்பது சங்கின் தொனியை யொத்த பிரணவஞ் சிரசிலே யாம்படி தானே வாயுக்கொள்ளுமென்றபடி. ஆவ மவ்விடத்திலே பாம்பு மென்றவாறு.

குறிப்பு :— இச்செய்யுள் சமாஜப் பதிப்பு முதலிய சில வெளியீடுகளில் சில மாறுதல்களுடன் காணப் பெறுகின்றது. அது வருமாறு :—

அடியும் முடியும் அமைந்ததோர் ஆத்தி
முடியும் நுனியின்கண் முத்தலை மூங்கில்
கொடியும் படையுங் கோட்சரன் ஐயைந்து
மடியும் வலம்புரி வாய்த்தஉவ் வாறே

என்பதாம்.

மதிப்புரை

பாண்டியர் பெருமாட்சி

ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை, பி. ஏ., பி. எல்., தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம், 8-சின்னரெட்டித் தெரு, எழும்பூர், சென்னை-8. விலை. ரூ 4—00. பக்கம் ×11+176.

இந்நூல் பாண்டியர் வரலாற்றைக் கூறுவது. சிறப்பாக அவர்கள் காலச் சமயநிலை, கோயில் வளர்ச்சி, சிற்பம், கலை, தமிழிலக்கியம், பண்பாடு என்ற பொருள்களை 16 பகுதிகளில் கூறுகிறது. நூலின் சிறப்புப் பகுதிகள் பிற் சேர்க்கையாயுள்ள வேள்விக்குடி, சீவர மங்கலம், சின்னமனூர், குடுமியாமலை, தென்காசிக் கல்வெட்டுக்களும், ஆதிச்சநல்லூர் பற்றிய தொல் பொருள் இலாகா அறிக்கைப் படங்களோடு, வேறுபல ஆலயப் படங்களும், சிற்பி வரைந்த முருகன் படைவீட்டுச் சித்திரங்களும் நூலை அழகு செய்கின்றன. பாண்டியர் வரலாற்றையும் அவர்கள் காலத்து மக்கள் வாழ்க்கையையும், வளர்ச்சியையும் அறிய விரும்புவாருக்கு இது சிறந்த தொரு பொருட்கருவூலம். (மு. அ.)

சைவ சித்தாந்த சாத்திரத் திரட்டு

திரு. தி. கி. நாராயணசாமி நாயுடு அவர்கள் தம் மனைவியார் நினைவு வெளியீடாக வெளியிட்டது. மெய் கண்ட சாத்திரங்களில் இருந்து தொகுத்த 110 பாடல்களைக் கொண்டது. தொடக்கத்தில் சாத்திர விளக்கம் சொல்லப் பட்டுள்ளது. இச்சிறு திரட்டு மனப்பாடத்திற்கு ஏற்றது. சாத்திரங்களுக்கு இதுவரையில் இவ்வாறு ஒரு சுருக்கமான திரட்டு யாரும் செய்ததில்லை. எல்லாச் சாத்திரங்களிலிருந்தும் பாடல்கள் இங்கு திரட்டப் பட்டுள்ளன. இப்பாடல்களை மனப்பாடம் செய்தால் ஓரளவு சாத்திரங்களுடைய கருத்தை மனத்தில் இருத்த முடியும். மெய்கண்ட சாத்திரப் பாடல்கள் சிவஞான போத முதல் சங்கற்பநிராகரணம் இறுதியாக (துகளறு போதம் உள்பட) 1289 பாடல்கள் தேர்ந்தெடுத்தமை 12-ல் ஒரு பங்கு. அடங்கன் முறைக்கு அகத்தியர் தேவாரத் திரட்டு போல மெய்கண்ட சாத்திரத்துக்கு இந்த நாராயணத் திரட்டு அமைந்திருக்கிறது. இதை ஓதி உணர்ந்தவர் அடங்கலும் ஓதி உணர்ந்தவர் ஆவர். (மு. அ.)

பண்டைத் தமிழக மாண்பும் வள்ளுவமும்

இரா. கு. நல்ல குற்றாலம் பிள்ளை, வள்ளுவப்பண்ணை, இராசபாளையம். விலை 1-25. ஆசிரியர் தமது 81-வது

வயதில் "நினைவிலும் பேச்சிலும் செயலிலும் வள்ளுவ நீதி மலர்ச்சி பெற வேண்டும். பசியும் நோயும் பறக்க வேண்டும் என்ற அருங் கருத்துக்களே வள்ளுவம்" என்ற பெரும் கொள்கையுடையவர். அதை உணர்த்தும் பொருட்டு இந்நூலை எழுதியுள்ளார் பொதுவாக பள்ளிப்படிப்பில் எவ்வாறு வள்ளுவம் விளங்க வேண்டும் என்பதை நன்கு சொல்கின்றார். இதற்கான விரிவான ஒரு தவ நெறிப் பயிற்சி நான்கு கட்டங்களாக வகுத்துத் தருகிறார். முதலாவது கைக் குழந்தையின் பயிற்சி இரண்டாம் கட்டம் 10 ஆண்டுகள் வரை, மூன்றாவது இளங் குமரப்பருவம் என்னும் படியான 13-ஆண்டுகள் வரை, நான்காவது குமரப் பருவம் 16 முடிய, காளைப்பருவம் 21 முடிய இதன் பொருட்டு அவர் திருக்குறளை வழக்கமாய்க் கொள்கின்ற அதிகார முறையில் அல்லாமல் புதிய முறையில் அறம் பொருள் ஆகிய 108 அதிகாரங்களையும் வகுத்துத் தருகிறார். இறுதியில் இல்லறம் முதிர்வு துறவு என்ற பகுதியும் தருகிறார். இவர் தரும் பாகுபாடும் கருத்துக் களும் தமிழ் மககளின் கவனத்திற்குரியன. (மு. அ.)

"சைவசமயம்" என்னும் நூல் ஒன்று வரப் பெற்றோம். இதன் ஆசிரியர் நம் சைவ சித்தாந்த மகா சமாஜச் சித்தாந்த இதழ் ஆசிரியராகிய திரு. மு அருணாசலம் எம். ஏ., அவர்கள் ஆவர். தம் அறுபதாண்டு நிறைவு விழா மலராக இதனை வெளியிட்டுள்ளார்கள்.

இந்நூலின் சைவசமயத்தைப் பற்றிய விளக்கங்களை சைவசமயம் என்பது யாது?, சைவ சாத்திரங்கள், சைவ ஆசாரியர், சைவ வழிபாடு, சைவச் சடங்குகள், சைவ தருமம், சைவ சாதனம், சைவ சித்தாந்த சமயதத்துவம் என 8 பிரிவுகளாகப் பிரித்து சுருங்கச் சொல்லி விளங்கவைத்துள்ளார்கள். நம் சமயத்தைப்பற்றி இது வரை இவ்வளவு பொருட் செறிவுடன் ஒரு நூல் உரை நடையில் வெளிவந்ததில்லை என்றுறுதியாய்க் கூறலாம். நூல் விரிந்துவிடுமோ என விழிப்பாய்ச் சுருக்க நினைத்துக் கலப்பு வாக்கியங்களையும் சேர்க்கை வாக்கியங்களையும் நிறைய எழுதியுள்ளார்கள், நம் சைவ சித்தாந்த சமயத் தைப்பற்றி அறிய உண்மைத் தாகமுள்ளோருக்கு இந்

நூல் ஒருசிறந்த அறிவுப் பெட்டகம் என்பதில் எட்டுணையும் ஐயமின்று. யாவரும் வாங்கிப்படித்து நம் சமய விளக்கங்களைத் தாங்களும் தெரிந்து பிறருக்கும் பரப்பமுற்படுவார்களாக. கிரௌன் அளவில் 6+136 பக்கங்கள் கொண்டுள்ளது நல்ல அச்சு. விலை ரூ. 2—00 வேண்டுவோர் "பாரிநிலையம், 59, பிராட்வே, சென்னை-1" என்னும் முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

(அம்பை)

"முருகன் புகழ்மாலை" என்னும் நூல் ஒன்று வரப்பெற்றேம். இது காப்புச் செய்யுளைத்தவிர முருகன் புகழைக்கூறும் பலவித சந்தப்பாடல்கள் 100ம் வாழ்த்துச் செய்யுள் 2-ம் கொண்டு மிளிர்கின்றது. நூலினிறுதியில் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் துதியென 12 பாக்களும் விளங்குகின்றன. இந்நூலையியற்றியவர் பாம்பன்சுவாமிகள் அடிமை காவாந்தண்டலம் திருமதி இராஜாம்பாள் அம்மையார் அவர்கள் ஆவர். இவ்வம்மையார் பாம்பன் சுவாமிகள் பாடல்களையே ஓதித்திளைத்து அதனால் பல்சந்த நலங்களைத் தெரிந்து பாடும் இயல்பு பெற்றவரென்று தெரிகின்றது.

இந்நூலிலிருந்து இவ்வம்மையார் முருகன் புகழ்கூறும் நூல்கள் பலவற்றையும் ஓதி உணர்ந்து திளைத்தவர்கள் என்று நன்குணரலாம். அருணகிரிநாதர், நக்கீரர் வாக்குகளையும், தேவாரம், திருவாசகம் ஆதிய திருமுறைப் பாடல்களையும் ஒட்டிப்பல செய்யுள்கள் இந்நூலில் அங்கங்கு காணக்கிடைக்கின்றன. எண்பது ஆண்டுகளைக் கடந்த இத்தவ முது மகளார் உலகமுய்ய வேண்டி இச்செய்யுணூலை யுதவியுள்ளார்கள். இந்நூலிலிருந்து இவ்வம்மையாரின் பத்திப்பெருக்கு, செய்யுளியற்றுந்திறனைக் கருவிலேயே பெற்றுள்ளமை தெற்றெனப் புலப்படும். மிகச் சிறந்த பாக்கள்; படிப்போருக்குப் பத்தியூட்டக் கூடியவை. அச்சுப்பிழை திருத்தியவர் சற்று நன்கு கவனித்துத் திருத்தியிருந்தால் சில எழுத்துப் பிழைகளில்லாமல் செய்திருக்கலாம்.

இந்நூல் 26—5—70 ல் பாம்பன் சுவாமிகள் குருபூசா நாளன்று வெளியிடப் பெற்றுள்ளது. கிரௌன் அளவு

36 பக்கங்கள் கொண்டுள்ளது. நல்ல அச்சுடன் கூடியது. விலை குறிக்கப்பெறவில்லை. நூல்வேண்டுவோர் 20 காசு தபால் தலையனுப்பிக் கீழ்க்காணும் முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம், நூல்கிடைக்குமிடம் :—

திருமதி. இராஜாம்பாள் அம்மையார், K.V. அருணாசல முதலியார், காவாந்தண்டலம், வாலாஜாபாத் வழி, செங்கல்பட்டு மாவட்டம். என்பதாம். (அம்பை)

"திருமுறைப்பாடல்கள் நூற்றெட்டு" என்னும் நூல் ஒன்று வரப்பெற்றோம். இது ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீவைத்திய நாதசுவாமி ஆலய வார வழிபாட்டுச் சங்கத்தின் மூன்றாவது வெளியீடாகும். நம் சமாஜப் பேரன்பர் திரு. க. சி. வேலாயுதனார் அவர்கள் திருமுறைக்கு 9 செய்யுள் வீதம் 12 திருமுறைகளுக்கும் 108 செய்யுள்களைத் திரட்டி இந்நூலில் தந்துள்ளார்கள்.

ஸ்ரீவில்லிபுத்தூர் திரு. சிவசுப்பிரமணிய முதலியார் அவர்கள் தம் 70-ஆம் ஆண்டு நிறைவு விழாவின் நினைவாக 19—1—70 அன்று கண்ணப்ப நாயனார் சந்நிதியில் தம் சொந்தச் செலவில் இதனை வெளியிட்டுதவினார்கள். இது பாராயணத்துக்குத் தக்கதொரு திரட்டாகும். விலை 25 காசுகள். தபாற்செலவு வேறு. வேண்டுவோர் :—

திரு. கு. சிவசுப்பிரமணிய முதலியார் அவர்கள், வடக்குரத வீதி, ஸ்ரீவிலலிபுத்தூர், இராமநாதபுரம் மாவட்டம். என்னும் முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். (அம்பை)

"திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் பிருதாவளி" என்னும் நூல் ஒன்று வரப்பெற்றோம். இது கோனாபட்டு ராம. பழ. அழகப்பச் செட்டியாரவாகள் தம் அறுபதாண்டு நிறைவு விழாவின் நினைவாக வெளியிடப்பெற்றது வடமொழியில் கிரந்த எழுத்தில் திருஞான சம்பந்தர் பெருமைகளை நிரல் படுத்தி மதுரைத் திருஞானசம்பந்தராதீனத்தார் ஓதி வந்தார்களாம். அது பின்னர் சிவநேசர் திருக்கூட்டத்தாராலும் மேற்கொள்ளப்பட்டதாம். தற்பொழுது அப்பிருதாவளியை ஓதுவாரின்மையால் அது மறைநது விடக்கூடாதே என மனத்துட்கொண்டு இவ்வெளியீட்டினை வெளிவரச்

செய்தது மிகவும் வரவேற்கத்தக்கது. கிரந்த எழுத்தோடு தமிழ், ஆங்கிலத்திலும் அப்பிருதாவளியை அச்சடித்துள்ளார்கள். அப்பிருதாவளிக்குரிய தமிழ் உரையும் காணப்பெறுகிறது. 6+20 பக்கங்கள் கொண்ட சிறுநூல்; விலை குறிக்கப் பெறவில்லை. வேண்டுவோர் :--

ராம. பழ. அழகப்பச் செட்டியார், கோனுபட்டு, இராமநாதபுரம் மாவட்டம். என்னும் முகவரிக்கு எழுதித் தபாற்செலவனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். (அம்பை)

''பரிபூரணனந்த போதமும் சிவசூரியப் பிரகாசம் எனு முரையும்'' என்னும் நூல் ஒன்று வரப்பெற்றோம். இந் நூலும் உரையும் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளால் எழுதப் பெற்றன. இந்நூலில் நம் சைவ சித்தாந்த சாத்திர நுட்பக் கருத்துக்கள் பலவற்றின் விளக்கங்களைக் காணலாம். இதன் முதற் பதிப்பு 1914 ஆம் ஆண்டு வெளிவந்தது தற்போது இரண்டாம் பதிப்பாக இந்நூல் 55 ஆண்டுகளுக்குப் பின்னர் வெளிவந்திருக்கிறது. பாக்களை மாத்திரம் படித்தால் பொருள் புரிந்துகொள்ளுதல் கடினமாயிருக்கும். மேலும் ஆசிரியர் கருத்துக்கு மாருகப் படிப்போர் பொருள் செய்து கொள்ளக்கூடாது என்பதற்காக சுவாமிகளே மிகச் சிறந்த முறையில் உரையையும் எழுதித் தந்துள்ளார்கள். இவ்வுரை மிகவும் போற்றத்தக்க முறையில் பல விழுமிய விளக்கங்களைக் கொண்டுள்ளது. இவ்வுரைக்குச் சிவ சூரியப் பிரகாசம் என்ற பெயரும் சுவாமிகளே கொடுத்துள்ளார்கள். இந்நூல் பாயிரம், பதி பசு பாசயதார்த்த விளக்கப்படலம், துறவற விளக்கப்படலம் என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் முறையே 13+115+102=230 பாடல்கள் அடங்கியுள்ளன. இந்நூலைப் படிப்போர் சுவாமிகளின் பேராற்றலை வெள்ளிடைமலையென அறிந்து மகிழ்வர் மேலும் தாங்களும் சைவசித்தாந்த சாத்திர ஞானம் தெளிவுறப் பெறுதலோடு அச்சாத்திரத் துறைப்பிணையும் பெறுவர். இதனை வெளியிட முயற்சி எடுத்துக் கொண்டவர் பாம்பன் சுவாமிகள் அடிமை திருமதி. V. அரங்கநாயகி அம்மையார் ஆவர். பிழைகளின்றி நன்கு பதிக்கப்பட்டிருக்கின்றது, ஆதலின் யாவரும் வாங்கிப்படித்து நம் சைவ சித்தாந்த சாத்திரத் தெளிவு பெற்றுத் திகழ்வார்களாக. டிம்மியளவில்

28 + 294 பக்கங்கள் கொண்ட இந்நூல் விலை ரூ. 6-50. நூல் வேண்டுவோர் திருமதி V. அரங்க நாயகி அம்மையார், குமரகுரு நூலகம், 2, புஷ்பாவதி அம்மாள் தெரு, மேலமாம் பலம், சென்னை-33 '' என்னும் முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். (அம்பை)

திரு. வெள்ளியங்கிரி ஆண்டவர் பாமாலை என்னும் நூல் ஒன்று வரப்பெற்றோம். இது புன்செய்ப் புளியம் பட்டி மறைமலையடிகள் மன்றத்தினரால் வெளியிடப் பெற்றது, ஆசிரியர் பாவலர் ஐ. கோ. இராமநாதன் அவர்கள் ஆவர். கிரௌன் அளவு 10 + 38 பக்கங்கள் கொண்டது. விலை ஐம்பதுகாசுகள், தபாற்செலவு வேறு.

இந்நூலில் காப்பாக 8 பாடல்களும் நூலாக 30 பாடல் களும் உள்ளன. தமிழ் முதலெழுத்துகள் முப்பது என்பதற்கேற்ப முப்பது பாடல்கள் பாடவேண்டுமென்று ஆசிரியர் உளங்கொண்டு பாடியதாகத் தெரிகிறது. பாடல் கள் யாவும் செம்பாகம் வாய்ந்தவை. கலிவிருத்தங்களால் இயன்றவை. பத்தியூட்டும் பான்மையினவா யுள்ளன. பிற்சேர்க்கையாகக் குறிப்புரையும் சிவபுராணமும் திரு வெம்பாவையும் உள்ளன. ஆசிரியர் முயற்சியும் மன்றத் தினரின் தொண்டும் பாராட்டற்பாலன. யாவரும் வாங்கிப்படித்துப் பயன்பெறவேண்டுகின்றோம். (அம்பை)

முருகவேள் பன்னிருதிருமுறை வகுத்தவரும் தேவார ஒளிநெறிக் கட்டுரை முதலிய பல ஆராய்ச்சி நூல்கள் எழுதியவரும் சமயத் தொண்டும் மொழித் தொண்டுமே தம வாழ்நாளின் குறிக்கோளென விளங்கி வருபவரு மாகிய பேரருளாளர் டாக்டர் தணிகைமணி வ. சு. செங் கல்வராயப் பிள்ளையவர்கள் தம் 87 ஆவது ஆண்டினை 15-8-70 அன்று நிறையும்பேறு எய்வது தெரிந்து சமாஜம் மிகவும் மட்டிலா மகிழ்ச்சி எய்துகின்றது. அவர்கள் வாழ்வு நம் சமயவாழ்வு; அவர்கள் அனுபவம் கூறுணைச் சிறப்பு வாய்ந்தது. அவர்கள் இன்னும் ஒரு நூற்றாண டின்புற்று இருந்து சமயத் தொண்டு புரிய திருத்தணிகை வளரீசன் இன்னருள்பாலிக்க அவனடியிணைகளையே வேண்டி வணங்குகின்றோம். அவர்கள் வாழ்க்கை வர லாறு அடுத்த இதழில் வெளிவரும். (துணையாசிரியர்)

சமாஜத் தேர்வுகளின் பாடத்திட்டம்

இளஞ் சைவப் புலவர்

1. **இலக்கணம்:** நன்னூல் காண்டிகை (ஆறுமுக நாவலர்) (6–50) யாப்பருங்கலக்காரிகை (3–50 கழகம்) தண்டியலங்காரம் (பொதுவியல், பொருளணியியல் மட்டும் (5–00-கழகம்)

2. **இலக்கியம்:** திருமுருகாற்றுப்படை (0-50 சமாஜம்) கந்தர் கலிவெண்பா (0-50 சமாஜம்) கந்தர் அனுபூதி (0-50-சமாஜம்) திருக்குறள் அறத்துப்பால் (6-50-நாவலர்) பரிமேலழகர் உரையுடன், சுந்தரர் தேவாரம் முழுவதும் (1–30-நாவலர்)

3. **சாத்திரம்:** திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் (1–50-கழகம்) உண்மை விளக்கம் (2–75-கழகம்) திருவருட்பயன் (0–30-கழகம்) கொடிக்கவி, வினாவெண்பா (கழகம்)

4. **உரைநடை:** சைவத்தின் சமாசம் (திரு. வி. க.) வாகீசர் அல்லது மெய்புணர்தல், (சிவக்கவிமணி 1-50கழகம்) தாயுமானவர் வரலாறும் ஆராய்ச்சியும் (கா. சு. பிள்ளை-2–50-கழகம்) பெரிய புராண வசனம் (ஆறுமுகநாவலர்–3–0)) திருவிளையாடற் புராண வசனம் (ஆறுமுக நாவலர்–3–50)

சைவப் புலவர்

1. **இலக்கணம்:** தொல்காப்பியம் எழுத்ததிகாரம் (நச்சினார்க்கினியம்–நாவலர் 6-00) சொல்லதிகாரம் (சேனாவரையம்–நாவலர் 3–50) பொருளதிகாரம் (இளம்பூரணம்-நாவலர் 9–50) தருக்க சங்கிரகம் (சிவஞான முனிவர்–நாவலர்-0–60)

2 **இலக்கியம்:** பெரிய புராணம் (திருநாவுக்கரசர் புராணம் முழுவதும்-3–50 காசிமடம் திருப்பனந்தாள்.) சம்பந்தர் தேவாரம் முழுவதும் (அம்பை நூலகம்) திருவாசகம் முழுவதும் (சமாசம் 1–00) ஒன்பதாம் திருமுறை முழுவதும் (சமாசம் 1–00)

3. சாத்திரம்: சிவஞானபோதச் சிற்றுரை (நாவலர் 2–75) சிவஞான சித்தியார் சுபக்கம் (சிவஞான முனிவர் உரை–நாவலர்-6-00) சிவப்பிரகாசம் (நாவலர்-2-00) சங்கற்ப நிராகரணம் (கழகம்)

4. உரைநடை: சைவ சித்தாந்த ஞான போதம் (மறைமலையடிகள்–கழகம்-6–20) சிவஞான சித்தியார் ஆராய்ச்சி (சிவகுருநாத பிள்ளை–கழகம் 1–75) திருக்குறளின் உட்கிடை சைவ சித்தாந்தமே (க. வச்சிரவேல் முதலியார், 1–75 அம்பை நூலகம்) பெரிய புராண ஆசனம் (நாவலர் 0–75)

சமாஜத் தேர்வு எழுதுவோர் கவனிக்க

தேர்வு எழுத விரும்புவோர் பாடத்திட்டத்திற் குறித்துள்ள நூல்களை நன்கினிது படித்துப் பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும். சைவப் புலவர் தேர்தலில் முதல் வகுப்பில் முதன்மையாகத் தேர்ச்சி பெறும் இளைஞர்க்கு அதற்கென அன்பரொருவர் வழங்கிய மூலப் பொருளினின்று வரும் வருவாயைக் கொண்டு பரிசு வழங்கப்பெறும். இளஞ் சைவப் புலவர் தேர்வுக்கு ரூபாய் மூன்றும் சைவப்புலவர் தேர்வுக்கு ரூபாய் நான்கும் பதிவுக் கட்டணம் ஆகும். விண்ணப்பம் அனுப்பும் இறுதி நாள் 30—9—70. தேர்வு நவம்பர் மாதம் மூன்றும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும். விண்ணப்பத்தில் 1. பெயர், 2. வயது, 3. எழுத விரும்பும் தேர்வு, 4. தேர்வு எழுத விரும்பும் இடம், 5. படிப்பு முதலிய விவரங்கள் எல்லாம் எழுதப் பெற்றிருக்க வேண்டும். தேர்வுக்குரிய நூல்கள் அடைப்புக் குறியில் காணப்பெறும் இடங்களில் கிடைக்கும். அவர்களின் முகவரிகள் வருமாறு 1. ஆறுமுக நாவலர் அச்சுயந்திரசாலை, 300, தங்கசாலைத் தெரு, சென்னை–1. 2. தென்னிந்திய சைவ சித்தாந்தக் கழகம், பிராட்வே, சென்னை–1. 3. அம்பை நூலகம், 7 A/1, கோவிந்தன் ரோடு, மேலைமாம்பலம், சென்னை–33. என்பதாகும்.

திருமயிலாப்பூர் ஸ்ரீ காரணீச்சுரர் ஆலயத்தில் பன்னிருதிருமுறைப் பெருவிழா 15—7—70 முதல் 26—7—70 முடிய இனிது நிகழ்ந்தது. நம் சமாஜ முன்னாள் தலைவர் திருவித்துவான் G. M. முத்துசுவாமி பிள்ளை ஐ. ஏ. எஸ். அவர்கள் தொடங்கி வைக்க நெல்லை திரு. R. S. இராமலிங்கம் அவர்கள் தினந்தோறும் விளக்கவுரை நிகழ்த்தினார்கள்.

குயப்பேட்டை இறைபணி மன்றத்தின் சார்பில் கந்தசாமி ஆலயத்தில் 17—7—70 மாலையில் சமய விரிவுரைக் கூட்டம் நிகழ்ந்தது. பண்டித நடேசனார் அவர்கள் தலைமையில் உயர்திரு மு. நரசிம்மனார் 'சாத்திரமும் தோத்திரமும்' என்பது பற்றிப் பேசினார்.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் நிறுவிய கட்டளைப் படி மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் ஆடிவீதி திருப்புகழ் மண்டபத்தில் 1—8—70 முதல் 9—8—70 முடிய பெரிய புராணச் சொற்பொழிவுகள் புலவர் பெருமக்கள் பலரால் நிகழ்த்தப் பெற்றன. 9—8—70ல் தில்லையில் திருமுறைவிழாவும் நிகழ்ந்தது.

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் சார்பில் 8—8—70 காலை திருமுல்லைவாயில் ஸ்ரீ மாசிலாமணி ஈஸ்வரர் திருக்கோயிலில் மாதாந்தர வழிபாடும் அன்று மாலை 6 மணிக்குத் தொண்டை மண்டலம் உயர்பள்ளியில் தருமபுரம் திரு. சுவாமிநாதனார் தேவார இசையரங்கும் நிகழ்ந்தன. 9—8—70 அன்று காலை 8 முதல் மாலை 5-30 வரை சுந்தரர் தேவாரப்பதிகங்கள் ஓதலும் சிறப்புவழிபாடும் நிகழ்ந்தன

தமிழ்க்கடல் மறைமலையடிகள் பெயரால் பல்லாவரம் அரசினர் உயர்நிலைப்பள்ளி, சைதை நந்தனம் அரசினர்கலைக் கல்லூரி, சமீன் பல்லாவரம் நகர், கூவம் ஆற்றோரப் பூங்கா முதலியன இயங்க வேண்டு மென்றும் சென்னைக்கடற்கரையில் குறிப்பிட்ட இடத்தில் அடிகளார் திருவுருவச்சிலை அமைய வேண்டுமென்றும் வேண்டுகோள் ஒன்று தமிழக அரசு முதலமைச்சருக்குத் தென்னிந்திய தமிழ்ச்சங்கம் அனுப்பியுள்ளது. அவ்வேண்டுகோளினைப் பிற கழகங்கள், மன்றங்கள் முதலியனவும் முதலமைச்சர் அவர்கட்கு அனுப்பிவைக்குமேல் இன்னும் வலியுடைத்தாம். ஆகவே தமிழ் முன்னேற்றம் சமய முன்னேற்றம் கருதும் நிலையங்கள் யாவும் அவற்றின் எழுச்சிக்கே உழைத்த அடிகளார் அவர்களுக்கு ஞாபகச் சின்னங்கள் அமைய ஆவன செய்ய வேண்டுகின்றோம்.

"குமார சிவம்" என அருள்திரு பாம்பன் அடிகளாரால் தீக்கை நாமம் சூட்டப்பெற்றவரும் அவர்கள் நூல்கள் வெளி வர அரிய முயற்சியினை மேற்கொண்டவரும் நம் சமாஜச் செயற்குழு உறுப்பினர் முதலிய பல நிலைகளிலிருந்தவருமாகிய உயர்திரு. திருவல்லிக்கேணி தா. வேங்கடாசல முதலியாரவர் கள் 4—8—70 செவ்வாய்க்கிழமை காலை 6-மணிக்குத் தம் 88-ஆவது அகவையில் அறுமுகச்சிவத்தின் அடியிணைகளில் கலந்தருளினார்கள்.

திரு. முதலியாரவர்கள் பாம்பன் அடிகளாரின் தலைசிறந்த மாணவர்களுள் ஒருவராவர். பொறுமையே உருவானவர். பெரிய நிலக்கிழாராயிருந்தும் சிறிதும் ஆடம்பரமற்ற தன்மை யினர். மயிலை, திருவொற்றியூர், திருவேகம்பம் முதலிய பலவிடங்களில் திருவிழாக்களை நடத்தி வருபவர். நம் சைவ சித்தாந்த சாத்திரங்களில் நுட்பமான அறிவுடையவர். பாம் பனடிகளின் கருத்து உலகிற்குப் பரவவேண்டும் என்பதையே கருத்தாய்க் கொண்டு அதற்கெனவே தம் உடல், பொருள், ஆவி முதலியவற்றை அர்ப்பணித்தவர். அத்தகைய பெரியார் இறப்பு நம் சமய உலகத்துக்குப் பேரிழப்பே. அதுகுறித்து சமாஜம் வருந்துகிறது. தம் வருத்தத்தை அன்னார் குடும்பத் தினருக்கும் தெரிவித்துக் கொள்கிறது.

மறைந்துள்ள அப்பெரியாரின் ஆன்மா அறுமுகச் சிவத்தின் அடியிணைகளில் கலந்தின்புற்றிருக்க அப்பெரு மானருளையே வேண்டி வழுத்துகின்றோம். (துணையாசிரியர்)

கோவை சேக்கிழார் திருக்கூட்டத்தார் ஸ்ரீ சுந்தர மூர்த்தி சுவாமிகள் ஸ்ரீ சேரமான் பெருமாள் நாயனார் 36 ஆவது ஆண்டு குருபூசைத் திருவிழாவைத் திருவஞ்சைக் களத்தில் 8—8—70 அன்று மிகச்சிறப்புற நிகழ்த்தினர். 9—8—70 10—8—70 ஆம் நாள்களிலும் சிறப்பு வழி பாடுகள் நிகழ்ந்தன. அன்பர்கள் பலர் கலந்து பயன் பெற்றனர்.

வெண்பா

நெருங்க வினைமாய்க்கும் நேர்நில்லா நெஞ்சக்
கருங்கல் மனமும் கரைக்கும்—முருங்கை
இதழான்தன் மோகமும் மோகம்வெல் நால்வாய்
அதளான்தன் அன்பொன்று மே

'கார்முகில்'

Printed at the Sengunthamithran Press, 33, Armenian Street, Madras by V. Sambandan, Edited by M. Arunachalam, M.A., and Published by S. Satchidanandam Pillai, B.A., L.T., for the Saiva Siddhantha Maha Samajam, 12, East Mada St., Mylapore, Madras-4.